
https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

25th AUGUST 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 94





## ஏழை வேட்பாளர் ரணில்:

# பணக்கார வேட்பாளர் திலித்

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் 39பேரும் சமர்ப்பித்துள்ள அவர்களின் சொத்து விபரங்களின் அடிப்படையில் அவர்களுள் பணக்கார வேட்பாளராக திலித் ஜயவீர உள்ளார். ஏழை வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க உள்ளார்.

திலித் ஜயவீரவின் மாதாந்த வருமானம் ஒரு கோடி 65 ஆயிரம் ரூபாவாகும்.ரணிலின் வருமானம் 97 ஆயிரத்து 500 ரூபாவாகும்.

வேட்பாளர்கள் யாரும் அவர்களின் சொத்து விபரங்களை மறைத்து தகவல்களை வழங்கியுள்ளார்கள் என்று மக்களுக்கு சந்தேகம் வந்தால் அது தொடர்பில் அவர்கள் பொலிஸிற்கு முறைப்பாடு செய்யலாம் என்று லஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்தது.




## சுவரொட்டிகளை அகற்றுமாறு உத்தரவு

சட்டவிரோதமான வகையில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள் பேனர்கள் ஆகியவற்றை உடன் அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கூட்டம் நடக்கும் இடம், அதையொட்டிய இடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியே சுவரொட்டிகளை ஒட்டவோ பேனர்களை வைக்கவோ முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




## எம்பிக்கள் பணம் கொடுத்து துப்பாக்கி வாங்க முடியும்

எம்பிக்கள் விரும்பினால் அவர்களது சொந்த நிதியில் இருந்து 2 repeater shot gun துப்பாக்கிகளை வாங்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அவர்களின் பாதுகாப்புக்காக ஒவ்வொரு வருக்கும் இரண்டு பொலிஸார் வழங்கப்பட்டுள்ளதோடு பிஸ்டல் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு வாரங்களுக்குள் இடம்பெறப்போகும் கட்சி தாவல்கள்




எதிர்வரும் 2 வாரங்களுக்குள் கட்சி தாவல்கள் பல இடம்பெறவுள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன.

அந்த வகையில் எதிர்கட்சியைச் சேர்ந்த இரண்டு எம்பிக்களும் சிறுபான்மை கட்சி ஒன்றும் அரசுடன் இணைவதற்கான ரகசிய பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன என்று அறிய முடிகிறது.

அதேவேளை, தற்போது அரசில் இருக்கும் எம்பி ஒருவர் எதிர்க்கட்சி பக்கம் பாய்வதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 AUGUST 25 - SUNDAY

# நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகள்?

பல இழுபறிகள்-சந்தேகங்கள்-சதி வேலைகள் மத்தியில் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்துவிட்டது. தங்களது கோபத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக மக்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பது நிச்சயம்.

அதற்கு காரணம் பொருளாதார நிலைமைதான்.மிகுந்த எதிர்பார்ப்புடன் கோத்தாபாய ராஜபக்சவை ஜனாதிபதி யாக்கினார்கள் மக்கள். எல்லாமே வெகு சீக்கிரத்திலேயே பிழைத்துப் போயின.

நாட்டு மக்களை முற்றாக ஏமாற்றிவிட்டு அனைவரையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினார்.

இதனால் பொங்கி எழுந்த மக்கள் அவரை விரட்டியடித்தனர்.

இரண்டு வருடங்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

அவரது மிகுதி காலத்துக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் மொட்டு கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

இதன்மூலம் மொட்டு கட்சிக்கு நாட்டு மக்களிடம் இருந்து பாதுகாப்பு கிடைத்தது.ஜனாதிபதி ரணில் அந்தப் பாதுகாப்பை சரியாக வழங்கினார்.

மொட்டு கட்சியினதும் ராஜபக்ச குடும்பத்தினதும் பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்தினார். இன்று அவர்கள் எதுவித அச்சமும் இன்றி மக்களிடம் செல்கின்றனர்.

அப்போது இருந்த பெரிய பிரச்சினையான எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

இதனால் மக்களின் கோபம் சற்றுத் தனியத்தொடங்கியது. ஆனால்,மறுபுறம் மக்கள் இறுகத் தொடங்கினர். ரணில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்காக அந்த நிதியம் விதித்த கடுமையான நிபந்தனைகளை அப்படியே ஏற்று அமுல்படுத்தத் தொடங்கினார்.

இதனால் பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறி மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது.

மின் கட்டண அதிகரிப்பால் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடினர்.இப்போதும் திண்டாடுகிறார்கள். லட்சக்கணக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

மறுபுறம், ஊதிய வரி அறிமுகத்தால் வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இன்னும் மக்கள் அதே கஷ்ட நிலையில்தான் உள்ளனர் பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. குறையவே இல்லை.

எரிபொருளையும் மின்சாரத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு பொருளாதார பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று சொல்கிறது அரசு.

இப்படியானதொரு நிலையில்தான் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அரசும் எதிர்க்கட்சிகளும் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பற்றி அரசும் ஐக்கிய மக்கள் சக்தியும் எல்லா மேடைகளிலும் வாக்குறுதிகள் வழங்கி வருகின்றன.

தேர்தல் காலங்களில் வழங்கப்படும் வாக்குறுதிகள் எல்லாம் தேர்தல் முடிந்த பின் காற்றில் பறக்கவிடப்பட்ட வரலாறுதான் இதுவரையும் இருந்து வருகிறது. இந்த முறையும் அப்படியேதான் அமையுமா என்ற சந்தேகம் எழுகிறது.








ஹரே கிருஷ்ணா

ISKCON
Sri Lanka



சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

ஸ்தாபக ஆச்சாரியார் : அருட்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா ஆலயம்

இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. தொலைபேசி : 011 2433325

# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி

## 26-08-2024 திங்கட்கிழமை

பேரன்புடையீர்,

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த நன்னாள் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் சிறப்பாக நடைபெற பகவான் கிருஷ்ணரின் திருவருள் கைக்கூடியுள்ளது.

## 26-08-2024 ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி

காலை 05.30 : மங்கள ஆரத்தி
காலை 06.00 : துளசி ஆரத்தி
காலை 08.00 : தர்சன ஆரத்தியும், குரு பூஜையும்
காலை 09.00 : குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரிச் சங்கினால் பால் அபிஷேகமும், ஆராதனையும், தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.
பகல் 12.30 : ராஜபோக ஆரத்தி

மாலை 5.30 : தூப ஆரத்தி
மாலை 6.15 : துளசி ஆரத்தி
மாலை 6.30 : சந்திய ஆரத்தியைத் தொடர்ந்து குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.
இரவு 11.00 மணி முதல் 12.00 மணி வரை : ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து விஷேட ஆராதனைகளும் நடைபெற்ற பின் பிரசாதம் வழங்கப்படும்.

## 27-08-2024 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீ வியாச பூஜை

காலை 05.30: மங்கள ஆரத்தி காலை 06.00: துளசி ஆரத்தி காலை 08.00: தர்சன ஆரத்தியும், குரு பூஜையும்



வலம்புரி
மஹா அபிஷேகம்

ஒரு வலம்புரி சங்கினை வாங்கி கோவில் திறப்புவிழாவின் ஒர் அங்கமாகிடுங்கள்

| Small Size-5" | Medium Size-8" | Large Size-10" |
|---|---|---|
| Rs.15,000/- | Rs.30,000/- | Rs.50,000/- |

அபிஷேகத்திற்கு பின் வலம்புரி சங்குகள் திருப்பிக் கொடுக்கப்படும்.

ISKCON A/C NO.105066990 1 COMMERCIAL BANK KOTAHENA BRANCH



நண்பகல் 12.00 மணிக்கு சர்வதேச கிருஷ்ண பக்திக்கழக ஸ்தாபகரும், எங்கள் ஆத்மீக குருவுமாகிய அருட்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை நடைபெறும்.

மாலை 6.30: சந்திய ஆரத்தி ஹரே கிருஷ்ணா இசை நாட்டிய கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். பகவான் கிருஷ்ணருக்கு தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.

அபிஷேகத்திற்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள் மற்றும் அன்னதானத்திற்கு வேண்டிய பொருட்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே





# முறியடிக்கப்படுமோ சந்திரிகாவின் சாதனை?

## 1994 - ஜனாதிபதி தேர்தல்பற்றிய ஒரு பார்வை

இம்முறை ஜனாதிபதி தேர்தல் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற வித்தியாசமான தேர்தலாகும்.

எல்லாத் தேர்தல்களும் இருமுனைத் தேர்தல்கள்தான்.ஆனால்,இம்முறைத் தேர்தல்தான் மும்முனைத் தேர்தலாக மாறியுள்ளது.

அனுர-ரணில்-சஜித்....

இதனால்தான் எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்தைத் தாண்டமாட்டார்கள் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனால், இதுவரை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் அதிக விகிதத்தைப் பெற்று சாதனை படைத்து முன்னணியில் இருப்பவர் சந்திரிக்காதான்.62.28 வீதம்.

இதுவரை யாரும் அந்தப் பதிவை-சாதனையை  உடைக்கவில்லை.

இந்தத் தேர்தலில் அது நடக்குமா என்ற கேள்வி சிலருக்கு எழுகிறது.

இந்தச் சாதனையை சந்திரிக்கா நிகழ்த்தியது எப்படி?

அதுபற்றித்தான் பார்க்கப்போகிறோம் இந்தப் பதிவில்...

அது ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலம்.

கொல்லப்படுகிறார் விஜயகுமாரதுங்க.

அவர் நடிகர் - மக்கள் கட்சியின் தலைவர் - சந்திரிகாவின் கணவர் ..

அதற்குப் பின் நாட்டில் இருக்க முடியாது சந்திரிக்காவுக்கு...

பாதுகாப்புப்  பிரச்சினை.

அவருக்கும் பாதுகாப்பில்லை.அவரது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பில்லை.

தப்பிச் செல்கிறார் வெளிநாட்டுக்கு...

மீண்டும் நாடு திரும்புகிறார் 90இல்...

வீழ்ந்து கிடக்கிறது சுதந்திர கட்சி. புது இரத்தம் இள இரத்தம் தேவை அதற்கு..

அந்த இளம் இரத்தமாக-புது இரத்தமாக சந்திரிக்கா...

அப்போது நாட்டின் ஜனாதிபதியாக ஆர்.பிரேமதாசா.

ஆனால், மெல்ல ஆட்டம் காணுகிறது அவரின் அரசு.

கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் பிரச்சினை.

அவர் ஜனாதிபதியாகி புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தமை-600 பொலிஸார் புலிகளால் கொல்லப்படுவதற்கு வழிவகுத்தமை உள்ளிட்ட காரணங்களால் நாட்டு மக்கள் பிரேமதாசா மீது கடும் கோபத்தில்...

கட்சிக்குள்ளும் அதே நிலை...

கட்சிக்குள் உருவாகிறது ஒரு குழு.பிரேமதாசாவுக்கு எதிரான குழு.காமினி திஸாநாயக்க,லலித் அத்துலத் முதலி ஆகியோரின் தலைமையில்...

பிரேமதாசாவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருகிறார்கள் அவர்கள். புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியமையை எதிர்த்து...

இதனால் ஆத்திரமடைந்த பிரேமதாசா காமினி ,லலித் உள்ளிட்ட 8 பேரை கட்சியில் இருந்து நீக்குகிறார்.

இதனால் உருவாகிறது புதிய கட்சி. லலித் தலைமையில்...ஐக்கிய தேசிய கட்சிக்கு சவாலாக...

இந்த நிலையில்தான் சுட்டுக் கொல்லாப்படுகிறார் லலித். பிரேமதாசாவின்மீதே வீழ்கிறது அந்தப் பலி.

இதனால் இன்னும் நெருக்கடி அவருக்கு...

ஒரு வாரத்தில் பிரேமதாசாவும் சரி.. புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்...

இந்தச் சம்பவங்கள் எல்லாம் ஐக்கிய தேசிய கட்சிக்கு பின்னடைவைக் கொடுக்கின்றன.

பிரேமதாசாவின் கொலையின் பின் ஜனாதிபதியாகிறார் டி.பி.விஜயதுங்க. ரணில் விக்கிரமசிங்க பிரதமர்..

அதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல்.

அந்தத் தேர்தலில் ஆட்டங்காணுகிறது ஐக்கிய தேசிய கட்சி.

மேல் மாகாண சபை சந்திரிக்கா வசம்.மேல் மாகாண முதலமைச்சராக சந்திரிகா.

அன்று பிடித்த சனிதான் ஐக்கிய தேசிய கட்சிக்கு.இப்போது வரைக்கும் பிடித்து ஆட்டுகிறது.

93ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து 94இல் நாடாளுமன்றத் தேர்தல்.அதிலும் ஐக்கிய தேசிய கட்சி அவுட்.

சந்திரிகா பிரதமர்.

ஜனாதிபதி பதவி ஐக்கிய தேசிய கட்சியிடம்.

நாடாளுமன்றம் சந்திரிகாவிடம். அவரின் தலைமையிலான பொதுஜன முன்னணியிடம்...

2 மாதங்களில் ஜனாதிபதி தேர்தல்.

இந்த பக்கம் சந்திரிகா.அந்த பக்கம் காமினி திஸாநாயக்க...

லலித் அத்துலத் முதலியின் மரணத்தைத் தொடர்ந்து காமினி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக்குள்.

அவரையே வேட்பாளராக நிறுத்துகிறது ஐ.தே.க.

தேர்தல் பிரசாரங்கள் ஏறிப்போகும் தருணம் அது.

தொட்டலங்கவில் காமினியின் பிரசார கூட்டம்.கொல்லப்படுகிறார் புலிகளின் தற்கொலைக் குண்டுத்  தாக்குதலில்...

அதனைத் தொடர்ந்து காமினியின் மனைவி  சிறிமா திஸாநாயக்க களமிறக்கப்டுகிறார்.

இப்போது சந்திரிக்காவுக்குப் போட்டியாக சிறிமா திஸாநாயக்க ..

இரண்டு பிரதான கட்சிகளிலும் இரண்டு பெண் வேட்பாளர்கள்.



**பிரேமதாசா ஜனாதிபதியாகி புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தமை - 600 பொலிஸார் புலிகளால் கொல்லப் படுவதற்கு வழிவகுத்தமை உள்ளிட்ட காரணங்களால் நாட்டு மக்கள் பிரேமதாசா மீது கடும் கோபத்தில்...**

இறுதியில் வெற்றிபெறுகிறார் சந்திரிக்கா.

சும்மா அப்படி இப்படி வெற்றியல்ல. அபார வெற்றி.

62.28 வீதத்தால்.4709205 வாக்குகள்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சிறிமா திஸாநாயக்க 35.91 வீதம்.2715283 வாக்குகள்.

கிட்டத்தட்ட 19 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் அந்த வெற்றி.

அணைத்து மாவட்டங்களிலும் வெற்றி.

196 தேர்தல் தொகுதிகளில் 195 சந்திரிக்கா வசம்.

ஒரேயொரு தொகுதியில் மாத்திரம்தான் தோல்வி. அது பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை தொகுதி.

சந்திரிக்காவின் இந்த சாதனை அப்படியே உள்ளது. இன்னும் முறியடிக்கப்படவில்லை.

இந்தத் தேர்தலிலும் அது முறியடிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை.

பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கப்போகிறது என்று...

**(ஊடகவியலாளர் எம்.ஐ முபாறக்)**

# இதுவரை $131 பில்லியன் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ள சவூதி அரேபியா




KING SALMAN
HUMANITARIAN AID & RELIEF CENTRE

மன்னர் அப்துல் ரஹ்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களது காலம் தொட்டே மனிதாபிமான உதவிகளை உலகம் பூராகவும் செய்து வருவதில் சவூதி அரேபிய இராச்சியம் முன்னனி வகித்து வருகிறது. இந்த நாமத்தை இன்றும் சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களும் கட்டிக் காத்து வருகின்றனர். உலக மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கும் கடினமான நேரங்களில் கைகொடுக்கும் நோக்கோடுமே இந்த தொண்டு மற்றும் மனிதாபிமான உதவிகளை சவூதி அரசாங்கம் செய்து வருகிறது.

1975 ஆம் ஆண்டிலிருந்து 2024 வரையான காலப்பகுதிக்குள், சவூதி அரேபியா 171 நாடுகளுக்கு தோராயமாக 131 பில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாகவும் உதவிகளாகவும் வழங்கியுள்ளதோடு, 7090 மனிதாபிமான, நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முடிவில், இவ்வாண்டில் உலகளவில் மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் நாடுகளுல் நான்காவது பெரிய நன்கொடை வழங்கும் நாடு என சவூதி அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மாத்திரம் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதிவிகளுக்காக சவூதி செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகளின் நிதி கண்காணிப்பு சேவையின் (FTS) படி, வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் பேரழிவுகள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு பிற நாடுகள் வழங்கும் அனைத்து உதவிகளிலும் இந்த தொகை 3.6மூ ஆகும்.

இந்த மனிதாபிமான முயற்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், 2015 ஆம் ஆண்டு மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (முளுசநடநைக) நிறுவப்பட்டது. அது நிறுவப்பட்டது தொடக்கம், 100 நாடுகளில் 3009 உதவித் திட்டங்களை மேற்கொண்டுள்ளதோடு 6.94 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பெறுமதியுள்ள உதவிகளை வழங்குகியுள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து மில்லியன் கணக்கான வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள் சவூதியின் உதவிகளால் பயனடைந்துள்ளமை மறுக்கமுடியாத உண்மையாகும்.

உலகின் முதன்மையான மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடிய நாடு என்ற சவூதியின் நிலையை உயர்த்த, சவூதி உதவி தளம், சவூதி சர்வதேச தன்னார்வ இணையதளம் மற்றும் சஹேம் மின்னணு நன்கொடை தளம் போன்ற தளங்களும் அந்நாட்டு அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளன.

KSrelief ஆனது மனிதாபிமான உதவிகளை உலக நாடுகளுக்கு வழங்குவதில் குறிப்பாக யெமன், காசா, சிரியா மற்றும் துருக்கி போன்று நாடுகளுக்கான உதவிகளில் முன்னணியில் உள்ளது. இலங்கைக்கும் பல மனிதாபிமான உதவித் திட்டங்களை வழங்கி வெற்றிகரமாக செய்து முடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதில் மிக முக்கியமாக அன்மை நாட்களில் இலவச கண் அறுவை சிகிச்சைத் திட்டத்தை இலங்கை மக்களுக்காக நடாத்தியமை யாவரும் அறிந்ததே.

யெமன் நாட்டைப் பொருத்தமட்டில் முளுசநடநைக, கண்ணிவெடி அகற்றலுக்கான சவூதி திட்டம் (MASAM), செயற்கை மூட்டு மையங்கள் மற்றும் ஆயுத மோதலுடன் தொடர்புடைய குழந்தைகளுக்கான மறு ஒருங்கிணைப்புத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. யெமன் அகதிகளை சவூதிக்கு வரவேற்று, அவர்களுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குகியிருக்கிறது.


காசாவில் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்ள, KSrelief வான் மற்றும் கடல் மார்க்கங்களினூடாக 185 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவப் பொருட்களை விநியோகித்துள்ளது. ஜோர்தானில் உள்ள 150 காசான் மக்களுக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான புற்றுநோய் சிகிச்சைக்கு இந்த மையம் நிதியளித்தது.

சிரியா மற்றும் துருக்கியில் ஏற்பட்ட பேரழிவு நிலநடுக்கங்களுக்கு உதவி செய்யும் வகையில், முளுசநடநைக செவிப்புலன் மறுசீரமைப்பை மற்றும் செவிப்புலனுக்கான இயந்திரம் வழங்குதல் தன்னார்வத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது. இது உலகின் மிகப்பெரிய தன்னார்வ மனிதாபிமான முயற்சியாக கருதப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையானது நவம்பர் 24ம் திகதியை, சவூதி அரேபயவின் பரிந்துரையின் பெயரில் உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினமாக ஏற்றுக்கொண்டது. இது மனிதாபிமான உதவிகளை உலகுக்கு வழங்குவதல் சவூதி அரேபியாவின் ஆர்வத்துக்கான தக்க சான்றாக அமைகிறது. சவூதி அரேபியா ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிறிக்கும் இத் திட்டத்தின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், KSrelief நவம்பர் மாதம் ரியாத்தில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களுக்கான சர்வதேச மாநாட்டையும் நடாத்தவுள்ளது.

இந்த முயற்சிகள் உலக மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் சவுதி அரேபியாவின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகின்றன, இது இராச்சியத்தின் விஷன் 2030 இலக்குகளில் ஒன்றாகும்.

**(காலித் ரிஸ்வான்)**






# Neptune Recyclersக்கு தங்க விருது



மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு முகாமைத்துவத்தில் நாட்டின் முன்னணி நிறுவனமான **Neptune Recyclers** நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழக **MBA** பழைய மாணவர் சங்கத்தினால் கடந்த 2024 ஓகஸ்ட் 06ஆம் திகதி கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை (**ESG**) உச்சிமாநாடு 2024 (**ESG Summit 2024**) இல் தங்க விருதைப் பெற்றதன் மூலம், ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த மதிப்புமிக்க விருதானது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விருது வழங்கும் விழாவில், **Neptune Recyclers** சிரேஷ்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களான பிரதம நிறைவேற்று அதிகாரி பஸ்லீன் மஜீத், வணிக மேம்பாட்டு முகாமையாளர் ஆதில் அஸீஸ், மோஷின் முஸ்தாக், வகீல் ஸக்கரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து இந்த விருதைப் பெற்றுக் கொள்ளும் கௌரவம் பஸ்லீன் மஜீத் மற்றும் ஆதில் அஸீஸ் ஆகியோருக்கு கிடைத்தது. நிலைபேறான வளர்ச்சியை நடைமுறைப்படுத்துவதில் நிறுவனத்தின் ஈடு இணையற்ற அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

# அமானாவின் பணிப்பாளர் சபைக்கு அஸ்ரின் சஹீர்



அமானா வங்கி தனது நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக அஸ்ரின் சஹீர் அவர்களை 2024 ஜுலை 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

அஸ்ரின், நிதித்துறையில் 30 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டவராக திகழ்கின்றார்.

தமது தொழில் வாழ்க்கையை **KPMG** கொழும்பில் ஆரம்பித்து பின்னர் ஏர்னஸ்ட் அன்ட் யங் பஹ்ரெய்னுக்கு மாறியிருந்தார். பின்னர் குவைட் பினான்ஸ் ஹவுசில் முதலீட்டு முகாமையாளராக இணைந்தார்.

குவைட் பினான்ஸ் ஹவுசில், சர்வதேச வங்கியியல் பிரிவினுள் வங்கியியல் வினைத்திறன் கண்காணிப்பு அலகு மற்றும் கடன் கண்காணிப்பு அலகு ஆகியவற்றின் தலைமை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதுடன், துணை வங்கிகளின் வினைத்திறனை மேற்பார்வை செய்திருந்தார்.

உறுதியான நிதிசார் அனுபவத்தின் காரணமாக, ஹகுவைட் பினான்ஸ் ஹவுஸ் மலேசியா பேர்ஹாட்டின் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2011 முதல் 2017 வரையான காலப் பகுதியிலும், 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலான காலப் பகுதியிலும் கடமையாற்றியிருந்தார்.

# Mercantile G பிரிவு தொடரில் 2024 சம்பியனாக தெரிவான யூனிலீவர் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அணி




**MCA** மைதானத்தில் கடந்த ஓகஸ்ட் 03ஆம் திகதி பரபரப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில், **Amazon Trading - English Tea Shop** அணியை தோற்கடித்து, **Unilever Sri Lanka** அணி, **Mercantile G** பிரிவு கிரிக்கெட் தொடரில் தோற்கடிக்கப்படாத அணியாக சம்பியன் பட்டத்தை வென்றது.

கடினமான லீக் சுற்றுகள் மற்றும் நொக் அவுட் சுற்றுகளின் விறுவிறுப்பான போட்டிகளுக்குப் பின்னர், யூனிலீவர் கிரிக்கெட் அணியின் ஒப்பிட முடியாத திறமை, குழுச் செயற்பாடு ஆகியவற்றின் மூலம், முதன் முறையாக இந்த சம்பியன் பட்டத்தை பெறுவதற்கான வாய்ப்பு உருவானது.

அனுஷ்க பண்டாரவின் தலைமையிலான, யூனிலீவர் ஸ்ரீ லங்கா அணியின் இத்தொடர் முழுவதுமான பயணமானது, அணியின் அனைத்து அம்சங்களிலும் ஈர்க்கும்படியான திறமையை காண்பித்தது.

லீக் சுற்றில், **Zillione Technologies, Synergen Health, Water's Edge, HNB Assurance** ஆகிய அணிகளை யூனிலீவர் அணி தோற்கடித்தது.

ஆயினும் **Wiley Global** மற்றும் **Kelani Cables** அணிகளுக்கு எதிரான போட்டிகள் முடிவு ஏதுமின்றி நிறைவடைந்தன. நொக் அவுட் சுற்றில், **Singer Sri Lanka, Star Garments, South Asian Technologies** அணிகளை வீழ்த்திய யூனலீவர் அணி, இறுதிப் போட்டியில், சச்சிர விஜேசிங்க (51 ஓட்டங்கள்) மற்றும் ஹரிஷாந்த் ராஜேந்திரன் (29 பந்துகளில் 75 ஓட்டங்கள்) ஆகியோருக்கு இடையேயான வெற்றிக்கு வழிவகுத்த இணைப்பாட்டமானது, இரு வீரர்களினதும் அரைச் சதங்களின் மூலம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தொடர் முழுவதும் துலான் அபேநாயக்க மொத்தமாக 202 ஓட்டங்களுடன் துடுப்பாட்ட தரவரிசையில் முன்னிலை வகித்ததோடு, தசித நிர்மல பந்துவீச்சில் அதிக விக்கெட்டுகளை (15) கைப்பற்றி சிறந்து விளங்கினார்.

# Sysco LABSஇன் வெள்ள நிவாரண நடவடிக்கை




**Sysco LABS** அண்மையில் தனது பிரதான நிலைபேறாண்மை செயற்திட்டமான '**Share a Meal, Share a Moment**' இன் 13ஆம் கட்டத்தைபூர்த்தி செய்திருந்தது.

காலி, தவலம பகுதியில் மோசமான காலநிலையினால் பாதிக்கப்பட்ட சமூகத்தாருக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 350 க்கு அதிகமான பொதிகளை நன்கொடையாக வழங்கியிருந்தது.

2020 ஆம் ஆண்டு இந்த '**Share a Meal, Share a Moment**' திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், இலங்கை முழுவதையும் சேர்ந்த குறைந்த வசதிகள் படைத்த 46,000 க்கும் அதிகமானவர்களை சென்றடைந்துள்ளது.


'**Connecting the world to share food and care for one another**' எனும் **Sysco** இன் நோக்கத்துக்கமைய இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

# பிரகாசத்தை இழக்கிறதா இரத்தினக்கல் தொழில்துறை?

பெறுமதி சேர் வரி (**VAT**) உள்ளிட்ட பல்வேறு அதிக வரிகளை சுமத்துகின்றமையானது, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறையில் உள்ள வணிகங்களை, அத்தகைய வணிகத்திற்கான சாதகமான சூழல்ககளைக் கொண்ட வேறு நாடுகளுக்கு இடம்பெயர்வதற்கு தூண்டுகின்ற, அதிகரித்து வரும் கவலை தொடர்பில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (**SLGJA**) அதன் கவனத்தை வெளிப்படுத்துகிறது.

பிரதானமாக வெளிநாடுகளுக்கு மீள்ஏற்றுமதி செய்வதற்கு அல்லது பெறுமதி சேர்க்கப்பட்டு நாட்டிற்கு வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் உள்நாட்டில் விற்கப்படும் நோக்கில் இறக்குமதி செய்யப்படும் பட்டை தீட்டப்படாத மற்றும் தீட்டப்பட்ட இரத்தினக் கற்களுக்கு 18மூ ஏயுவு வரி விதிக்கப்படுகின்றமையானது, அவை, இலங்கையில் அதன் நிலைபேறான தன்மையையும், இத்தொழில்துறையின் பல்வகைத் தன்மையையும் இழக்கும் வகையிலான, தீங்கான நிலைக்கு அதனை மாற்றியமைத்துள்ளது.

18% **VAT** வரி விதிப்பின் காரணமாக, இத்தொழில்துறையானது துபாய், இந்தியா, ஹொங்கொங்,



தாய்லாந்து போன்ற வளர்ந்து வரும் போட்டியாளர்களாகக் காணப்படும் நாடுகளுக்கு இடமாற்றத்திற்குள்ளாகும் அபாயம் அதிகரிக்குமென, **SLGJA** ஏற்கனவே எச்சரித்து வந்தது.

# DFCCஇன் கூடுதல் வட்டி




இலங்கையில் டிஜிட்டல் வங்கிச்சேவைப் புரட்சியில் முன்னோடியான **DFCC** வங்கி, **DFCC** இணைய வங்கிச் சேவையினூடாக ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து நிலையான வைப்புக்களுக்கும் 0.5% கூடுதல் வட்டியை வழங்கி, தனது வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டுகின்றது.

உங்களுடைய சௌகரியத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ள, **DFCC** இணைய வங்கிச்சேவை உள்ளிட்ட எமது டிஜிட்டல் வழங்கல் வழிமுறைகள், எங்கேயும், எப்போதும் தங்குதடையின்றி, சௌகரியமாக நீங்கள் வங்கி நடவடிக்கைகளை முன்னெடுக்க இடமளிக்கின்றன.

இந்த கவர்ச்சியான சலுகையானது டிஜிட்டல் வங்கிச்சேவையை கைக் கொள்வதற்கு உங்களை ஊக்குவித்து, அதிகபட்ச சௌகரியம், பாதுகாப்பு மற்றும் இலகுவான பரிவர்த்தனை ஆகியவற்றை வழங்குகின்றது.

குறைந்தபட்ச தொகையாக ரூபா 10,000 ஐக் கொண்ட நிலையான வைப்புக்களுக்கு **DFCC** வங்கி வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இவ்வசதி கிடைக்கின்றது.

# சிறந்த HIKSEMI பங்களிப்பாளர்கள் கௌரவிப்பு



2018 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் வருடாந்த **IT Gallery Partner Summit** மாநாடானது, தொழில்துறையில் புத்தாக்கம் மற்றும் தொடர்புகளை மேம்படுத்துவதில் இடம்பெறும் முக்கிய நிகழ்வாக காணப்படுகின்றது. இவ்வருடம் தமது கூட்டாண்மையைக் கொண்டாடும் வகையில் இலங்கையிலுள்ள **HIKSEMI** முகவர்களை பாராட்டி கௌரவிக்கும் **HIKSEMI Sri Lanka Dealer Appreciation Conference** 2024 மாநாட்டை அறிமுகப் படுத்துவதில் **IT Gallery** பெருமிதம் கொள்கிறது.
4 வருடங்களுக்கு முன்னர் **HIKSEMI** வர்த்தக நாமத்தை தமது சேமிப்பக தீர்வுகள் மற்றும் தயாரிப்புகளின் பிரதான விநியோகஸ்தராக **IT Gallery Computer (Pvt) Ltd** இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. 2023 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் **ITG** மற்றும் **HIKSEMI** வணிகத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய முதலிடத்திலுள்ள மூன்று பங்குதாரர்களை கௌரவிக்கும் நோக்கில் இந்நிகழ்வு முன்னெடுக் கப்பட்டது. விநியோகஸ்தர் வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் ஒரு வாய்ப்பை இது ஏற்படுத்தியது.
இந்த நிகழ்வில் **PCIe 4.0 NVMe SSD Future Pro and Future Lite, Future DDR5, Gaming Solution, Surveillance SSD V300X, High-Speed Micro SD NEO LUX, Professional Camera, SD Portable E Sd Portable, NVMe SSD Elite series** மற்றும் **SSD USB Ultra** உள்ளிட்ட பல்வேறு புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டமை விசேட அம்சமாகும்.

# PLEASE செயற்திட்டத்துடன் இணைவு




**INSEE Cement** நிறுவனம், இலங்கையில் நிலைபேணத்தக்க கழிவு முகாமைத்துவத்தில் முன்னோடியும், மற்றும் முன்னிலை வகிக்கும் வழங்குநருமான **INSEE Ecocycle** என்ற அதன் முழுமையான உரிமை யாண்மையின் கீழான துணை நிறுவனத்தினூடாக, தெற்காசியாவில் பிளாஸ்திக் மாசற்ற ஆறுகள் மற்றும் கடல்கள் **(Plastic Free Rivers and Seas for South Asia - PLEASE)** செயற்திட்டத்துடனான அதன் ஒத்துழைப்பு குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது.
இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டைக் குறைப்பதற்காக புத்தாக்கமான முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இச்செயற்திட்டம் **INSEE Ecocycle** நிறுவனத்திற்கு இடமளிக்கும்.
உலோகம், இறப்பர் மற்றும் காகிதம் உள்ளிட்ட சிக்கலான கலவை காரணமாக மீள்சுழற்சி செய்யப்பட முடியாத கலவை பிளாஸ்திக் நிலைமையால் இலங்கை கணிசமான சவாலுக்கு முகங்கொடுத்து வருகின்றது.
இந்த சிக்கலான நிலைமை மேற்பட்ட வகை கழிவுகளை செயன் முறைகளுக்கு உட்படுத்துவதில் மீள்சுழற்சியாளர்களுக்கு செலவையும், சவாலையும் விளைவித்துள்ளதுடன், பெருந்தொகையான பிளாஸ்திக் கழிவுகள் நிலப்பரப்பில் வீசப்படுகின்றன. இச்செயற்திட்டத்தின் போது மேற்குறிப்பிட்ட சவாலைச் சமாளிப்பதற்கு **INSEE Ecocycle** சமூகத்துடன் நெருக்கமாக இணைந்து செயற்படும்.

# மலிபனின் தலைவராக குமுதிகா பெர்னாண்டோ



2024 ஆகஸ்ட் 15 முதல் அமுலுக்கு வரும் வகையில், திருமதி குமுதிகா பெர்னாண்டோ அவர்கள் மலிபன் குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
திருமதி பெர்னாண்டோ அவர்களின் தந்தையாரும், மலிபன் குழுமத்தின் தலைவராக முன்னர் கடமையாற்றிய வருமான திரு. ஏ.ஜி. ரட்னபால சமரவீர அவர்கள் அண்மையில் காலமானதைத் தொடர்ந்து இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.
மலிபன் நிறுவனத்தின் ஸ்தாபகரான காலஞ்சென்ற ஏஜி ஹினி அப்புஹாமி அவர்களின் புதல்வரான திரு. சமரவீர அவர்கள் மலிபன் குடும்பம் நீண்ட காலமாக பேணி வந்துள்ள தரம், மகத்துவம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மரபினை கட்டிக்காத்துள்ளார்.
ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ள குமுதிகா பெர்னாண்டோ அவர்கள் மலிபன் நிறுவனத்தை எதிர்காலத்தில் சிறப்பாக வழிநடாத்திச் செல்வதற்கான சகல திறமைகளையும், தகுதியையும் கொண்டுள்ளதுடன், மலிபன் குடும்பத்தின் பாரம்பரியத்தை தொடர்ந்தும் கட்டிக்காப்பார். தனது தந்தையின் வழிகாட்டலின் கீழ் சிறப்பாக பயிற்று விக்கப் பட்டுள்ள அவர், நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதில் பெரும் பங்களிப்பாற்றியுள்ளதுடன், தயாரிப்பு பல்வகைப்படுத்தல், ஏற்றுமதிகளை விரிவுபடுத்தல் மற்றும் புதிய சந்தைகளில் காலடியெடுத்து வைத்தல் ஆகியவற்றினூடாக கணிசமான வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு நிறுவனத்தை வழிநடாத்தியுள்ளார்.

# உலக தொழில்முனைவோர் தினத்தை கொண்டாடும் தீவா

'தீவா கரத்திற்கு வலிமை' தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, **Hemas Consumer Brands** நிறுவனத்தின் முதன்மையான சலவைப் பராமரிப்பு வர்த்தகநாமமான **Diva** (தீவா) மற்றும் **Women in Management (WIM)** ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒத்துழைப்புத் திட்டமாகும்.
மத்திய மாகாணத்திலுள்ள 100 இற்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோரின் பங்குபற்றுதலுடன், **WIM** இன் தலைவர் **Dr.** சுலோச்சனா சிகேராவினால், உலக தொழில்முனைவோர் தினத்தை முன்னிட்டு, கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி, மாத்தளை பிரதேச




செயலகத்தில் ஒரு நாள் கருத்தரங் கொன்று முன்னெடுக்கப்பட்டது. இக்கருத்தரங்கைத் தொடர்ந்து, பெண் தொழில்முனைவோரின் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் தொழில் முனைவோர் திறன் குறித்த நடைமுறை அனுபவத்தை வழங்க இரண்டு நாள் பயிலரங்கமும் நடத்தப்படவுள்ளது.

# ISCஇன் வருடாந்த பட்டமளிப்பு விழா

சர்வதேச கல்விக்காக தனித்துவப் படுத்தப்பட்ட இலங்கையின் முன்னணி நிறுவனமான **International Study Centre (ISC)** நிறுவனம், சினமன்ட் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற பிரம்மாண்டமான பட்டமளிப்பு விழாவில் கல்வியின் சிறப்பு மற்றும் மாணவர்களின் கடும் உழைப்பைக் கொண்டாடியது.
2024 ஓகஸ்ட் 03ஆம் திகதி நடைபெற்ற இந்த விழாவானது **ISC** மாணவர்கள், பீடம் மற்றும் அதன் பணியாளர்கள் ஆகியோரின்




அர்ப்பணிப்பைப் பறைசாற்றும் வகையில் அமைந்தது.
கல்வித் துறையில் உள்ள முக்கிய பிரமுகர்களின் பிரதான உரைகள் உள்ளிட்ட பல்வேறு சிறம்பம் சங்களைக் கொண்டதாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.
இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் மாண்புமிகு திரு.எரிக் வோல்ஷ் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## அலியான்ஸ் தலைக்கவசங்கள் நன்கொடை




இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றும், சர்வதேச பெரு நிறுவனமான Allianz SE இன் உறுப்பு நிறுவனமுமான அலியான்ஸ் லங்கா, வீதிப் பாதுகாப்பு குறித்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதுடன், குறிப்பாக, வீதிகளில் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைவாக, சிறுவர்களுக்கான பாதுகாப்பு தலைக்கவசங்களை விநியோகிக்கும் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தை அலியான்ஸ் லங்கா முன்னெடுத்துவருகின்றது.

மோட்டார்சைக்கிள்களில் பாடசாலைக்கு செல்லும் சிறுவர்களில் பலரும் பெரும்பாலான சமயங்களில் தலைக்கவசமின்றி பயணிக்கின்றமை, வீதிகளில் பிரயாணம் செய்கின்ற இத்தகைய பிரிவினர் மத்தியில் பேராபத்திற்குள்ளாக்கின்றது என்பதே அதற்கான காரணம்.

அந்த வகையில், வீதிகளில் பயணிக்கின்ற சிறுவர்கள் பாதுகாப்பு குறித்த தனது அர்ப்பணிப்பினை வெளிச்சம் போட்டுக் காட்டியவாறு, தொடர்ச்சியாக தனது 3வது வருடாந்த சிறுவர் பாதுகாப்பு தலைக்கவச விநியோக முன்னெடுப்பை அலியான்ஸ் லங்கா மேற்கொண்டு வருகின்றது.

# பிரிட்டிஷ் கவுன்சில்
## கல்வி ஆய்வறிக்கை வெளியீடு



இலங்கையில் நாடு கடந்த கல்வியின் (TNE) தற்போதைய நிலை மற்றும் எதிர்கால சாத்தியங்கள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கும் ஒரு முக்கிய அறிக்கையை பிரிட்டிஷ் கவுன்சில் வெளியிட்டது. இது மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் வாய்ப்புகள் மற்றும் சவால்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

BMICH இல் நடந்த நிகழ்வில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதுடன் மற்றும் இந்நிகழ்வில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ஷ்ரூ பேட்ரிக், கல்வி அமைச்சின் அதிகாரிகள், கல்விக் கொள்கை வகுப்பாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் அவுஸ்திரேலிய கல்விப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இங்கு பேசுகையில் : "இலங்கையின் கல்வியறிவு வீதம் மற்றும் அடிப்படைக் கல்வியில் ஈர்க்கக்கூடிய முன்னேற்றங்கள் இருந்த போதிலும், உயர் கல்வி திறனில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 171,532 தகுதியுள்ள மாணவர்களில் 44,000 பேர் மட்டுமே 2022 இல் அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர். தனியார் உயர்கல்வி மற்றும் நாடு கடந்த கல்விக்கான வளர்ந்து வரும் தேவை கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. "இலங்கையின் உயர்கல்வித் துறையில் நாடு கடந்த கல்வியானது எவ்வாறு இடைவெளியைக் குறைக்க முடியும் என்பதை இந்த அறிக்கை தெள்ளத்தெளிவாக உணர்த்தும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்றார்.




## ஹேமாஸின் அக்ரஹாரா பயனாளிகளுக்கான சேவை

LMD சஞ்சிகையின் பிரகாரம், இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான ஹேமாஸ் மருத்துவமனை, அரச துறை ஊழியர்களுக்கான அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்தின் பயனாளிகளுக்கு குறைந்த செலவுடன், உயர்தர மற்றும் சௌகரியமான சேவைகளை வழங்கும், இலங்கையிலுள்ள மிக அதிகமாக சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்றுள்ள ஒரு மருத்துவமனையாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அக்ரஹாரா, 3 மில்லியனுக்கும் மேற்பட்ட அரச மற்றும் அரசுடன் இணைந்தியங்கும் நிறுவக ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு முழுமையான மருத்துவக் காப்புறுதியை வழங்குகின்றது. நோயாளரை மையமாகக் கொண்ட சுகாதாரப் பராமரிப்பினை, கணிசமான சேமிப்புக்கள் மற்றும் ஏனைய நன்மைகளுடன், ஹேமாஸ் மருத்துவமனையின் பரந்த அடைவு மட்டம் மற்றும் அதிநவீன ஆற்றல்களின் அனுகூலத்தினை தற்போது இந்த பயனாளிகள் பெற்று அனுபவிக்க முடியும்.

# Kaspersky இன் ஆசிய பசிபிக் பிராந்திய இணையப் பாதுகாப்பு மாநாடு 2024




உலகளாவிய இணையப் பாதுகாப்பு சேவை வழங்குநரான Kaspersky, ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான தனது வருடாந்த இணையப் பாதுகாப்பு வார இறுதி அமர்வை 2024 ஆகஸ்ட் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை இலங்கையில் நடத்தியது.

இணையப் பாதுகாப்பு தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சமீபத்திய பாதுகாப்பு சவால்களை முகங்கொடுப்பது குறித்த விழிப்புணர்வை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இதில் உலகின் முன்னணி இணையப் பாதுகாப்பு நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், முன்னணி தொழில்துறை நிர்வாகிகள் மற்றும் பிற தொழில்வல்லுநர்கள் எதிர்கொள்ளும் கடும் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் யுஐ இன் பிரபலத்தால் ஏற்படக்கூடிய சவால்கள் குறித்த ஆழமான பகுப்பாய்வை முயளிநசளமல இன் இணையப் பாதுகாப்பு வல்லுநர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால், Ransomware போன்ற இணைய தாக்குதல்கள் மேலும் சிக்கலாகவும், நுணுக்கமாகவும் மாறிவருகின்றன. இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, Kaspersky நிறுவனத்தின் வல்லுநர்கள் உலகின் முன்னணி இணையப் பாதுகாப்பு நிபுணர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், முக்கிய தொழில்துறைகளில் இருந்து வந்த தலைமை அதிகாரிகளுக்கும் (CTOs) விரிவான பகுப்பாய்வுகளையும் தகவல்களையும் வழங்கினர்.